## பலன்கள்

1 **இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படை செல்வம் சிலருடைய கைகளில் மட்டும் குவிந்திருக்கக்கூடாது, அதுமக்களிடைய தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்பதாகும்.** *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

كَيْ لَا يَكُونَ دُولَةً بَيْنَ الْأَغْنِيَاءِ مِنكُمْ ۚ ﴿٧﴾

*பொருள்: ஏனெனில், அது உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே மட்டும் சுற்றிக்கொண்டிருக்கக்கூடாது என்பதற்காக (அல் ஹஷ்ரு:7)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஜ்ஸகாத் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு ஏழைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது, இவ்வகையில், இது மனிதர்களுக்கான பொதுவான சமூகப் பாதுகாப்பின் ஓர் அமைப்பாகும், இதன் காரணமாக, வட்டியின் அடிப்படையிலான பொருளாதாரத்தின் வேர்கள் அறுக்கப்பட்டுவிடுகின்றன.

2 **ஜ்ஸகாத் மற்றும் ஸத:காவின் மூலம் ஏழ்மை மற்றும் நொடிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்படும்.** இது மனித சமுதாயத்தில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த சவாலாக இருந்தது என்றால், இதன் அடிப்படையில் தான் சோஷலிஃஸம் மற்றும் கம்யூனிஸம் போன்ற கொள்கைகள் தோன்றியுள்ளதோடு, அவை பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் சமத்துவம், சம உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன எனக் காரணம்காட்டி மனிதர்களை ஒருவரையொருவர் எதிர்த்துப்போராடும் இரு வர்க்கங்களாகவே பிரித்தவிட்டுள்ளன. அத்துடன், ஏழைகளின் மனதில் தங்களுடைய ஏழ்மையின் உணர்வுகளையும், பொறாமை மற்றும் இழப்பின் உணர்வுகளையும் தூண்டிவிட்டு மனித சமுதாயத்தையே நரகமாக ஆக்கிவிட்டுள்ளன. இஸ்லாமியப் பொருளாதாரம் அதன் உண்மையான வடிவில் அதற்கான குறிக்கோளுடன் நடைமுறைப்படுத்தப் படுமேயானால், பொருளாதார ஏற்றத்தாழ்வின் இந்த இடைவெளி இல்லாது போகும். அத்துடன், ஒவ்வொரு செல்வந்தரும் தன்னைச் சுற்றியுள்ள ஏழைகளின் காப்பாளராகவும் அதரவாளராகவும் ஆகிவிடுவார். சமுதாயத்தின் சகோரத்துவமும் நட்பிற்குமான சுற்றுச்சூழல் உண்டாகிவிடும்.

3 **மனிதர்களுடன் கனிவு அவர்களுடன் கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்வது மனிதர்களுக்கான சிறப்புமிக்கப் பண்பாகும்.** இஸ்லாமியப் பொருளாதாரம் செயல்படுத்தப்படுவதன் மூலம் மனிதர்களிடையே இந்தப் பண்பு உண்டாவதோடு மனிதன் செல்வத்தை அடைவதற்காக ஒரு மிருகமாக

www.uzairfalahi.com

மாறிவிடுவதற்குப் பதிலாக, துயரத்தில் ஆழ்ந்தவர்கள் மற்றும் திக்கற்றவர்களுடன் அவர்களுடைய துயரத்தைப் பகிர்ந்துகொள்பவனாகவும் உதவுபவனாகவும் ஆகிவிடுகின்றான்.

4 **அளவுகடந்த செல்வமும் கடுமையான ஏழ்மையும் பெரம்பாலும் குழப்பங்களுக்குக் காரணமாக ஆகிவிடுகின்றன.** ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, ஏழ்மையும் பசி பட்டினியும், ஒரு மனிதனை இறைமறுப்பின் அளவிற்குக் கொண்டு சேர்த்துவிடுகின்றது. சில சமயங்களில், ஒரு மனிதன் ஏழ்மையின் பிடியில் சிக்கி அதனைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்துகொள்வதற்கும் முற்பட்டுவிடுகின்றான். அதே சமயத்தில், அளவு கடந்த செல்வமும் ஒரு மனிதனை பாவச்செயல்கள், குற்றம், அநீதி, கொடுமை, வன்முறை மற்றும் சட்டத்திற்குப் புறம்பான முறையிலும் அச்சுறுத்திப் பணம் பறித்தும் செலவத்தை அடையும் முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கின்றது. இஸ்லாமியப் பொருளாதார அமைப்பு இந்த இரு வர்க்கத்தினரையும் நிலையான வகையில் நிலை நிறுத்துகின்றது.

5 நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது, **ஸதஃகாவின் மூலம் ஒரு மனிதனுக்கு நிகழ்வதாக இருந்த பேரிடர்கள் மற்றும் சோதனைகள் நீக்கப்பட்டுவிடுகின்றன.**

6 **எவரும் ஸதஃகா மற்றும் ஜ்ஸகாத் கொடுப்பதை நிறுத்திக்கொண்டால், அல்லாஹ் தஆலாவும் அவர்கள்மீதிருந்து தன்னுடைய அருளை நீக்கிக்கொள்கிறான் மற்றும் அவர்கள் மீது பஞ்சம் மற்றும் பற்றாக்குறையை சுமத்திவிடுகின்றான்.**

7 **ஜ்ஸகாத் கொடுப்பதன் மூலம் ஒரு மனிதனுடைய செல்வம் தூய்மையடைந்துவிடுகின்றது. ஏனெனில், எந்த பொருளில் ஜ்ஸகாத்தும் சேர்ந்துவிடுகிறதோ அது அதனை அழித்துவிடுகின்றது**

* * *

www.uzairfalahi.com